DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 150/2021

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி.கஸ்தூரி | Caste: | |
| Husband's Name | : காளை | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

11.02.2026 – 12.05 PM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் கமுதி புனவாசல் காலனியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு டிசம்பர் மாதம் 29 ம் தேதி ஒரு நாள் மாலை 04.00 மணியளவில் நான் எனது வீட்டு வாசலில் இருந்தபோது ஆஜர் எதிரியானவர் எங்கள் தெருவில் நின்று கொண்டு எங்கள் வீட்டிற்கு முன்பாக பல்லை விலக்கி ரோட்டில் துப்பினார்.

2. நான் எதிரியிடம் இது அனைவரும் நடமாடும் பாதை என்பதால் ஏன் இவ்வாறு ரோட்டில் துப்புகிறாய் என்று கேட்டேன். அவ்வாறு கேட்ட உடனேயே எதிரி என்னிடம் நான் அப்படித்தான் செய்வேன் என்று கூறினார். நான் எதிரியிடம் இப்படி செய்யக்கூடாது என்று சொல்லவும் எதிரி ஓடி வந்து எனது வலது கை மணிக்கட்டு அருகே பிடித்து அவரது பல்லால் கடித்து சதையை பிய்த்துவிட்டார். இரத்தம் வர ஆரம்பித்துவிட்டது. அவ்வாறு செய்துவிட்டு எதிரி அவரது வீட்டிலிருந்த அருவாமனையை எடுத்து வந்து தேவிடியா முண்டை உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்.

3. நான் உடனடியாக அபிராமம் காவல் நிலையம் சென்று போலீசாரிடம் கூறி புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **புகார் மனு அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகாரை பெற்றுக் கொண்ட போலீசார் என்னை கமுதி

அரசு மருத்துவமனை செல்லுமாறு கூறினார்கள். அதன் பேரில் கமுதி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றுக் கொண்டேன். மேற்படி சம்பவம் நடந்தபோது எங்கள் பக்கத்து வீட்டுக்காரரான மரியாள், இருளாயி ஆகியோர்கள் வந்து சண்டையை விலக்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. போலீசார் சம்பவத்தன்று என்னை விசாரித்தார்கள். அதன் பின்னர் என்னை விசாரிக்கவில்லை. மரியாள் எனது மகனின் மனைவி ஆவார். மரியாளின் வீடு எனது வீட்டிலிருந்து 50 அடி தொலைவில் உள்ளது. எனது வீட்டிற்கு எதிர்புறம் மோகன் என்பவரது வீடு உள்ளது. முனியாண்டியின் வீடு மோகனின் வீட்டிற்கு அருகாமையில் உள்ளது. முனியாண்டி வீட்டின் பக்கத்தில் தான் மரியாளின் வீடு உள்ளது. புகாரை எனது மகள் தமிழ்ச்செல்வி எழுதினார்.

2. புகாரில் சம்பவமானது 29.12.2020ம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் என்று எழுதிவிட்டு பின்னர் அது மாலை சுமார் 04.00 மணி என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது மகள் தெரியாமல் எழுதிவிட்டதால் அது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக காலையில் தான் பல் துலக்குவார்கள் என்றால் சரிதான். ஆனால் ஆஜர் எதிரி அன்றைய தினம் மாலையிலும் பல் துலக்கினார்.

3. எதிரி என்னை வலது கை மணிக்கட்டிற்கு கீழ் கடித்துவிட்டதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு எதிரி கடித்ததில் சதை பிய்ந்துவிட்டது. அன்றைய தினம் நான்கு இரு சக்கர வாகனத்தில் எனது உறவினர்கள் அனைவரும் சேர்ந்து வந்தார்கள். அவர்கள் என்னை ஒரு இரு சக்கர வாகனத்தில் ஏற்றி கமுதி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் கமுதி அரசு மருத்துவமனைக்கு சென்றபோது மாலை 07.00 மணி இருக்கும்.

4. தமிழ்ச்செல்வி, மரியாள் அனைவரும் தான் மருத்துவமனை சென்றோம். மருத்துவர் எனது காயத்திற்கு தையல் போட வேண்டும் என்று

சொன்னார்கள். நான் பயந்து கொண்டு வேண்டாம் என்றும் கட்டுப் போடுமாறும் கேட்டுக் கொண்டேன். எதிரி அவரது வீட்டின் குப்பையை வெளியே உள்ள குப்பைத் தொட்டியில் கொட்டியதால் நான் எதிரி மீது கோபம் கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. நான் வெளியே சென்றபோது நிலைதடுமாறி கீழே விழுந்ததில் கீழே கிடந்த கல் எனது மணிக்கட்டிற்கு அருகில் பட்டு ஏற்பட்ட காயத்தை வைத்துக் கொண்டு எதிரியை பழிவாங்கும் நோக்கில் பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் கூறியபடி எனது மணிக்கட்டிற்கு அருகே சதை பிய்க்கப்பட்டிருந்தால் மருத்துவர்கள் எனக்கு தையல் போட்டு வைத்தியம் பார்த்திருப்பார்கள் என்றாலும் நான் கூறுவது பொய் என்பதால் தான் நான் மருத்துவ சிகிச்சைக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் கூறியபடி சம்பவம் நடைபெற்றிருந்தால் எனது உறவினர் இல்லாத நபர்கள் வழக்கில் சாட்சியாக இருந்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.02.11 17:14:04 +0530